[*2022 ஏப்ரல் 22*

திரு. செல்லூர் கே. ராஜூ: *ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் ஒரு தகவல். இந்த* VRG Construction Company *தான் மதுரை முழுவதற்கும்* contract *எடுத்திருக்கிறது. அந்த நேரு நகர் பகுதியில் கடந்த 3, 4 நாட்களாக கழிவுநீர் அகற்றப்படாததால் சாக்கடை ஆறாக போனதால், அங்கிருக்கின்ற பொறியாளர் சொல்லித்தான், இவர்கள் அவசரம் நிமித்தமாக, பணி செய்தார்கள். இந்த வார குடிநீர் காலையில் வரப்போகிறது. எனவே, உடனடியாக செய்யப் பணித்தார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *எனவே, அதற்குள் நீங்கள் இதை அகற்றிவிட வேண்டும் என்று சொன்னதால்தான். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, போதும். போதும்.*

திரு. செல்லூர் கே. ராஜூ: *அவர்கள் கீழேயிறங்கியதால் அந்த விபத்து நடந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இறந்த 3 பேருமே இளைஞர்கள், மிக மிக ஏழைகள். எனவே, இந்த நிதியைக் கூடுதலாக ஒதுக்கி, சம்பந்தப்பட்ட* Contractor*-ரிடமிருந்து வாங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் கருணைகூர்ந்து கூடுதலாக நிதியைப் பெற்றுக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த 3 பேருமே ஏழைகள்.*

6. கவன ஈர்ப்பு

விராலிமலை தொகுதி, கோங்குடிப்பட்டி, துவான் குளம் நீர் கொள்ளளவை வரையறை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

2022 ஏப்ரல் 22]

***டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விராலிமலை சட்டமன்றத் தொகுதி, துவான் குளத்தின் நீர் கொள்ளளவை வரையறை செய்ய வேண்டியது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று உறுப்பினர்களின் மேசையின்மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதிக்குட்பட்ட விராலிமலை ஊராட்சி ஒன்றியம் கட்டுப்பாட்டில் உள்ள கோங்குடிப்பட்டி ஊராட்சி, கோங்குடிப்பட்டி துவான் குளத்தில் டிசம்பர் மாதம் 2021-ல் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் உடைப்பு ஏற்பட்டது. இக்குளத்தின் சர்வே எண் 27, பரப்பளவு 26.67.00 எக்டேர், 15 மீட்டர் உடைப்பு ஏற்பட்ட பகுதி, முதற்கட்ட நடவடிக்கையாக ஊராட்சி மன்றத் தலைவரால் மண் மூட்டைகள் கொண்டு அடைக்கப்பட்டது. இதனை முழுமையாகச் சரி செய்திட தொடர்புடைய ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு, குளத்தின் முழு நீர் கொள்ளளவை (Full Tank Level) *வரையறை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். அதில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தரப்பிலிருந்து விளக்கம் அளிக்கப்பட்டு இருக்கிறது. அதில் ஒரேயொரு கருத்தை மட்டும் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

[டாக்டர் சி. விஜயபாஸ்கர்] [2022 ஏப்ரல் 22

கடந்த டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி பெய்த மிகப் பெருமழையின் காரணமாக, அந்தக் குளம் நிரம்பியிருக்கின்றது. நள்ளிரவில் நிரம்பிய அந்தக் குளத்தினால், குளம் நிரம்புகின்றது என்று மக்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். அதிகாலையில் குளம் உடைபட்டு, முழுமையாக நீர் வெளியேறிவிட்டது. நானும் அந்த இடத்திற்குப்போய் ஸ்தல ஆய்வு செய்தேன். அப்போது அது உடைபட்டதா அல்லது உடைக்கப்பட்டுவிட்டதா என்று இரண்டு பஞ்சாயத்துகளில் உள்ள மக்களிடையே இருவேறு கருத்துகள் எழுகின்றன.

விராலிமலையைச் சேர்ந்த கோங்குடிப்பட்டி ஊராட்சி மக்களிடம் ஒரு கருத்தும், அன்னவாசல் ஒன்றியத்தைச் சேர்ந்த முளவகோள்பட்டி மக்களிடம் ஒரு கருத்தும் ஏற்படுகின்றது. இதில் என்னவென்று சொன்னால், கடந்த 4 மாதங்களாக உடைபட்ட குளம் அடைக்கப்படவில்லை. 15 மீட்டர் அப்படியே இருக்கிறது. இப்போது மழை பெய்தாலும்கூட, ஒரு சொட்டு நீரும் குளத்தில் தங்காமல் அப்படியே அந்த நீர் வெளியேறிவிடும். காரணம் என்னவென்றால், அந்தக் குளத்தின் கொள்ளளவையும், குளத்தின் எல்லையையும் வரையறை செய்ய வேண்டுமென்று இரு தரப்பு மக்களுமே ஒன்றாக மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்திருக்கிறார்கள். இதுவரை அந்தப் பிரச்சினைத் தீர்க்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: நான் அன்போடு வேண்டுவது, வருவாய்த் துறையும், ஊரக வளர்ச்சித் துறையும் இணைந்து, மறுவரையறை செய்து, உடைபட்ட அந்தக் குளத்தை உடனடியாக அடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு சொட்டு மழை பெய்தாலும் நீர் வெளியேறிவிடும். ஒரு பதட்டமான சூழ்நிலை நிலவுகிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விராலிமலை தொகுதிக்குட்பட்ட

2022 ஏப்ரல் 22] [திரு. கே.ஆர். பெரியகருப்பன்]

விராலிமலை ஊராட்சி ஒன்றியக் கட்டுப்பாட்டிலுள்ள, கோங்குடிப்பட்டி ஊராட்சி, கோங்குடிப்பட்டி, துவான் குளம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போன்று, டிசம்பர் மாதம் அதில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. 15 மீட்டர் அளவிற்கான அந்த உடைப்பை முதற்கட்டமாக ஊராட்சி மன்றத் தலைவர் மண்மூட்டைகளைக் கொண்டு சரிசெய்துள்ளார். அருகிலுள்ள அன்னவாசல் ஒன்றியம், கட்டக்குடி கிராமத்திலும், முருகன்பட்டி குக்கிராமத்திலும் வயல்வெளிகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆக, ஆக்கிரமிப்புகள் அந்த கண்மாய்க்குள் இருக்கின்ற காரணத்தாலோ அல்லது வெட்டிவிடப்பட்ட நீரினால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தாலோ இரு கிராம மக்களுக்கிடையிலே சில பிரச்சினைகள்; அதிலும் குறிப்பாக, கோங்குடிப்பட்டி கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் சொல்வது என்னவென்றால், பழைய கணக்கின்படி, அதாவது, 1960–களில் உள்ள கணக்கின்படி எப்படி குளத்தின் எல்லை இருந்ததோ, அதைப்போன்று நீங்கள் இப்போது அளந்து தர வேண்டுமென்று கேட்கிறார்கள். இதுபற்றி வருவாய்த் துறைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வருவாய்த் துறை உரிய நடவடிக்கை எடுத்து, அவர்கள் சர்வே செய்து கொடுத்த பிறகு இதற்கான எல்லைகள் வரையறுத்துத் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காலதாமதமின்றி அடுத்த மழைக்கு முன்னதாக இந்தக் குளத்தை வரையறை செய்து, குளத்தினுடைய அடைப்பை அடைக்க வேண்டி மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்தி, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பிரச்சினைதான். எப்படி உடைப்பு ஏற்பட்டவுடன், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் சென்று, அந்தப் பிரச்சினையில் அக்கறை*

[திரு. கே.ஆர். பெரியகருப்பன்] [2022 ஏப்ரல் 22

எடுத்துச் செயல்பட்டீர்களோ, அதேபோன்று, இப்பொழுதும் நீங்கள் அந்த இரு கிராம மக்களிடமும் பேசி, இரு துறைகளினுடைய அலுவலர்களையும் நீங்களும் அணுக வேண்டும். அதற்கான முயற்சியை இந்தத் துறையும் மேற்கொள்ளும்.

7. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 4–5–2022 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 25–இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), 48–போக்குவரத்துத் துறை மற்றும் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகியன 5–5–2022 (வியாழக்கிழமை) அன்றும், 5–5–2022 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 47–இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை), 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) ஆகியன 4–5–2022 (புதன்கிழமை) அன்றும் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதைப் பேரவையின் ஒப்புதலுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 2022–2023, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,180,22,35,000/,